JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | **554/2019** |
| Deposition of witness for | **P.W. 4** | Prosecution /Defence / Court | |
| Name | குமார் | Village | காசிபில்லாம்பாளையம்,<br>கம்புளியம்பட்டி |
| Father's Name | சுப்பரமணி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 03.02.2026.**

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு போர் வண்டியில் வேலை செய்து வருகிறேன். 07.06.2015 ம் தேதி மாலை 6.30 மணியளவில் நான் பெருந்துறை புதிய பேருந்து நிலையத்தில் நான் திருப்பூர் செல்வதற்காக பேருந்திற்காக காத்துக் கொண்டு நின்று கொண்டிருந்த போது C5 என்ற வழித்தடம் கொண்ட அரசுப் பேருந்து வந்து பயணிகள் இறங்கிக் கொண்டு இருந்தார்கள். அ.சா.1 சத்யபிரகாஷ் மேற்படி பேருந்தில் இருந்து இறங்கி நிற்கும் போது திடீரென பேருந்தை ரிவர்ஸ் எடுத்த போது அ.சா.1 ற்கு பேருந்தின் முன் சக்கரம் ஏறி வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டது.

2. பேருந்தின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை அதனால் எனக்கு ஓட்டுநரை தற்போது அடையாளம் காட்ட இயலாது. பேருந்து நிலையத்தில் இருந்த நபர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் அ.சா.1 யை பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். மறுநாள் 08.06.2015 ம்

தேதி மாலை 5.30 மணிக்கு மேல் இருக்கும். நான் பெருந்துறை புதிய பேருந்து நிலையத்தில் இருந்த போது பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்த்து படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததில் நான் முதலாவதாகவும், வினோத் இரண்டாவதாகவும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். என்னை பெருந்துறை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.2 செல்வம் என்னிடம் வேலை செய்தவரா என்றால் ஆமாம். போலீசார் விசாரணையில் பெருந்துறை புதிய பேருந்து நிலையத்தில் விபத்து ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த திசையில் நின்று கொண்டிருந்தேன் என்றால் வடக்கு திசையில் நின்று கொண்டிருந்தேன். புதிய பேருந்து நிலையத்தில் உள்ளே நுழையும் போது வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். உள்ளே நுழைந்தவுடன் இடது கை பக்கம் திருப்பூர், சேலம் மற்றும் விரைவுப் பேருந்துகள் நிற்கும், அதன் வலது கை பக்கம் ரவுண்டானா உள்ளது. அதன் வலது பக்கத்திற்கு வலது பக்கம் அரசு டவுன் பஸ்கள் நிற்கும் என்றால் சரிதான்.

2. விபத்து நேரம் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் நேரம் என்றால் சரிதான். டவுன் பஸ்ஸை பொறுத்த வரையில் பேருந்து நிற்பதற்கு முன்பாகவே பேருந்தில ஏறுவார்கள் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் 5 – 6 டவுன் பஸ்கள் இருந்தது என்றால் சரிதான். நான் நின்று கொண்டிருந்த திசைக்கு வட கிழக்கில் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். பேருந்தின் முன்பகுதி மேற்கு திசை பார்த்து இருந்தது. அ.சா.1 சத்யபிரகாஷ் எந்த வழியாக இறங்கினார் என்றால் முன் பக்க வழியாக இறங்கினார். அப்போது பஸ்ஸின் பாதி பகுதி டிராக்கின் பாதியில் இருந்தது என்றால் சரிதான்.

3. அ.சா.1 சத்யபிரகாஷ் தான் என்பது பேருந்தில் இருந்து இறங்கிய பின்னர் தான் தெரிந்தது. அ.சா.1 இறங்கிய இடத்தில் கிரில் கேட் உள்ளதா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் அ.சா.1 மது போதையில் இருந்ததாக மருத்துவர்கள் சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நார்மலாக பேசினார். நான் சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மறுநாள் பேருந்து நிலையம்

சென்றேன் என்றால் சரிதான். போலீசார் நான் போகும் போது டிராக், ரவுண்டானா, தனியார் பேருந்து நிற்கும் இடம் ஆகியவற்றைகுறித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். டிராக்கின் உள்ளே செல்லும் போது சம்பவம் நடந்தது என்று மாதிரி வரைபடத்தில் குறித்துக கொண்டார்கள் என்றால் அது சரிதான். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.2 செல்வம் என்னிடம் வேலை செய்வதால் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு சம்பவ இடத்தில் கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை